பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 06 2024 **WEDNESDAY** 6 45 **AM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தலைவர் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.
- சென்னையில், 500 மின்சாரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் அறிவித்துள்ளார்.
- முதல்முறை ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் யாத்ரிகர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Krishna Prasad Garaga – Sai Pratheek** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

மக்களவைத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

18வது மக்களவையின் முதல்கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கடந்த இரண்டு நாட்களாக பதவியேற்றுக் கொண்டனர். புதிய உறுப்பினர்களுக்கு இடைக்கால சபாநாயகர் திரு. **Bhartruhari Mahtab** பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிலையில், மக்களவைத் தலைவர் பதவிக்கு ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் முன்னாள் மக்களவைத் தலைவரும் பிஜேபி மூத்த உறுப்பினருமான திரு ஓம். பிர்லாவும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் திரு கொடிக்குன்னில் சுரேஷும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் நேற்று, தங்களது வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

மக்களவைத் தலைவரை ஒருமனதாக தேர்வு செய்வதற்கு மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. பியூஷ் கோயல் ஆகியோர் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

மக்களவை துணைத்தலைவர் பதவியை தங்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி நிபந்தனை விதித்ததால், பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் போட்டி உருவாகியுள்ளது.

இன்று காலை மக்களவை கூடியதும் மக்களவைத் தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெறும்.

இதற்கிடையே, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, சுதந்திரத்திற்குப் பின்னர் இதுவரை மக்களவைத் தலைவர் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டதாகவும், எதிர்க்கட்சிகள் நிபந்தனை விதித்ததால் தற்போது அந்த நடைமுறையை தொடர இயலவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையே திரு. ஓம் பிர்லா, நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேற்று சந்தித்து பேசினார்.

>>>><<<<

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக திருமதி. சோனியா காந்தி ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

>>>><<<<

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 8 சதவீதத்தை நோக்கி முன்னேறி வருவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. திரு. சக்தி காந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சி பல்வேறு துறைகளிலும் எதிரொலித்து வருவதாக கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி முறை முன்னோடியாக இருப்பதாலும், பல்வேறு கட்டமைப்பு சீர்திருத்தங்களாலும், தற்போது வளர்ச்சிப் பாதைக்கான மாற்றத்தை நோக்கி நகர்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பிற நாடுகளை விட ஜிஎஸ்டி வரிமுறை வேகமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், மாதாந்திர ஜிஎஸ்டி வரி வசூல், 1 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதன் காரணமாக நாட்டின் வர்த்தகம் எளிமையாக்கப்பட்டிருப்பதாகவும் திரு. சக்தி காந்ததாஸ் தெரிவித்தார்.

>>>><<<<

இந்தியாவின் அணுசக்தி உற்பத்தி திறன் அடுத்த ஐந்தாண்டுகளில் 70 சதவீதம் வரை உயரும் என்றும் மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அணுசக்தி துறையின் அடுத்த 100 நாட்களிலான திட்டம் குறித்த உயர்நிலை குழுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் அணுசக்தி துறையில் இந்தியா வேகமான முன்னேற்றத்தை அடைந்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>><<<<

நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரம் தொடர்பாக, மகாராஷ்ட்ரா மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர் சஞ்சய் ஜாதவை, அம்மாநில சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

இதே வழக்கில் ஏற்கனவே லத்தூரைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் கைதான நிலையில் இரண்டாவது நபராக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை, காவல்துறையினர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

>>>><<<<

பேருந்து பயணிகள் படிக்கட்டிலிருந்து தவறி விழுவது உள்ளிட்ட விபத்துகளை தவிர்க்க 15 கோடியே 54 லட்சம் ரூபாய் செலவில் 3 ஆயிரத்து 886 பேருந்துகளுக்கு தானியங்கி கதவுகள் பொருத்தப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், பயணிகள், பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள், பேருந்தின் பின்புற சக்கரங்களில் விழாமல் தடுக்க ஏதுவாக, 8 ஆயிரத்து 771 பேருந்துகளுக்கு பாதுகாப்பு அரண்கள் பொருத்தப்படும் என்று கூறினார்.

சென்னையில், 500 மின்சாரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும், பேருந்துகளில் சரக்குகளை அனுப்பும் சேவை அறிமுகப்படுத்தப்படும், 10 கோடி ரூபாய் செலவில் பணிமனைகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும், மாதாந்திர விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு திட்டம் அனைத்து நகர பேருந்துகளிலும் விரிவாக்கம் செய்யப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் அமைச்சர் திரு. சிவசங்கர் வெளியிட்டார்.

>>>><<<<

முதல்முறை ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் யாத்ரிகர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், 1 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 500 சிறுபான்மையின மகளிருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள், பணியாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்தி வழங்கப்படும்,

3 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் கடலூர் மாவட்டத்தில் செயல்படும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படும்,

மக்கள் அதிகம் வரும் தொன்மையான ஆறு தர்ஹாக்களில் 5 கோடி ரூபாயில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

>>>><<<<

தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக மாநில பிஜேபி துணைத் தலைவர் திரு. கே.பி. ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

கரூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் அதற்கு மிகச் சிறந்த உதாணரம் என்று கூறினார்.

>>>><<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை தொடங்கி கன்னியாகுமரி வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் அறிவித்துள்ளது.

மன்னார்வளைகுடா முதல் குமரிக்கடல், தெற்கு வங்கக்கடல் மற்றும் மத்திய அரபிக்கடல் வரையிலான பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் இந்த நாட்களில் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், கனமழை காரணமாக, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் தாலுகாவிற்கு உட்பட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

கென்ய தலைநகர் நைரோபியில் வன்முறை போராட்டங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

>>>><<<<

ஜம்முவிலிருந்து **Panchhi** வழியாக வைஷ்ணவ் தேவி கோவிலுக்கு, ஹெலிகாப்டர் சேவை தொடங்கப்பட்டுள்ளது

>>>><<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைதாகி, சிறையில் உள்ள தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஜாமினுக்கு தில்லி உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

>>>><<<<

போட்டித் தேர்வு வினாத்தாள் வெளியாகும் பட்சத்தில், ஆயுள் தண்டனை வழங்க வகைசெய்யும் சட்டத்திற்கு உத்தரபிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

>>>><<<<

காவிரியில் தமிழகத்திற்கு ஜூன், ஜூலை மாதத்தில் வழங்க வேண்டிய தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

>>>><<<<

மக்களவைக்கு தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

>>>><<<<

திண்டுக்கல் மாவட்டத்தில், பளியர் இன மக்கள் வசிக்கும் வீடுகளுக்கே சென்று, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கும் முறையை மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் புகையிலை தடுப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம், ஆட்சியர் திரு. தர்பகராஜ் தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

>>>><<<<

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 கிலோ ரேஷன் அரிசியை உணவு பாதுகாப்புத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

**>>>><<<<**

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள பள்ளிகளுக்கு வழங்கப்படும் சமையல் உபகரணங்களை ஆட்சியர் திரு. பி.என். ஸ்ரீதர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Krishna Prasad Garaga – Sai Pratheek** இணை அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, அயர்லாந்தின் **Scott Guildea – Paul Reynolds** இணையை 21-14, 21-12 என்ற செட்கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் **Treesa Joly – Gayatri Gopichand** இணை இன்று சீன தைபே இணையை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**

உலக கோப்பை டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இப்போட்டி, இந்திய நேரப்படி நாளை காலை 6 மணிக்கு தொடங்கும்.

நாளை இரவு 8 மணிக்கு தொடங்கும் மற்றொரு அரையிறுதிப் போட்டியில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

**>>>><<<<**